பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 04 புதன்கிழமை 17.03.2021 கதிர் 363

## அஸாத் ஸாலியின் காரிலிருந்து வெளிநாட்டு கைத்துப்பாக்கி மீட்பு

### பல கோணங்களில் விசாரணை

கைதுசெய்யப்பட்டுள்ள மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலியின் காரிலிருந்து கைத்துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

2

# சர்வதேசத்திடம் நீதி கோரி யாழில் மாபெரும் பேரணி

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கதறல்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தக் கோரி, யாழ்ப்பாணத்தில் இன்று மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்துடன் கூடிய பேரணி முன்னெடுக்கப்பட்டது.

2






## பாகிஸ்தானின் தேவைக்கேற்ப தீர்மானம் எடுக்கவே முடியாது!

### சீண்டுகின்றார் அமைச்சர் வீரசேகர



பாகிஸ்தான் அரசின் தேவைக்கேற்ப இலங்கையில் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

2

## குற்றவாளிகளை அரசு பாதுகாக்காது: உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

### அமைச்சர் பீரிஸ் உறுதி



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரையும் அரசு பாதுகாக்காது. உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் சாதகமான பெறுபேறுகள் கிடைக்கப்பெறும்.

– இவ்வாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்

2

## வேதாரண்யம் மீனவர்களைத் தாக்கி கடலில் கொள்ளையர்கள் கைவரிசை





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.17

இந்தியாவின் வேதாரண்யம் அருகே வெள்ளப்பள்ளத்திலிருந்து கடலுக்குள் மீன்பிடிக்கப் புறப்பட்ட 3 மீனவர்களை

2

## இ.போ.ச. பஸ்ஸைப் பிடிப்பதற்காக ஓட்டோவைக் கடத்திய மாணவர்கள்

### விபத்தில் சிக்கி படுகாயம்

இ.போ.ச. பஸ் சென்றுவிட்டதால், மாணவர்கள் இருவர், அந்த பஸ்ஸைப் பிடிக்க வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்திச் சென்றபோது, அந்த ஓட்டோ விபத்துக்குள்ளாகியதில், அவ்விரு மாண

2

## முன்னணியின் வழக்கு: தீர்ப்பு 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்.17

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட அக்கட்சியின் ஆறு உள்ளூராட்சி உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கிய விடயத்தின் குடியியல் மேன்முறையீட்டு மாகாண நீதிமன்றின் தீர்ப்பு எதிர்வரும் 31ஆம்

2

### அ'புரவுக்கு இரகசியமாக அள்ளிச் செல்லப்பட்ட

## காணி ஆணைக் குழுவின் ஆவணங்கள் நாளை மீண்டும் யாழ் எடுத்து வரப்படும்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.17

வடக்கு மாகாண காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் இருந்து கடந்த 8ஆம் திகதி அனுராதபுரத்திற்கு இரகசியமாக எடுத்துச் செல்லப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் நாளை மீண்டும் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக வளாகத்தில் இயங்கிய நிலையில் இதன் ஆவணங்களை

2

## புர்கா, நிகாப்பைத் தடை செய்ய அரசு தீர்மானம் எடுக்கவில்லை

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு



இலங்கையில் புர்கா மற்றும் நிகாப் அணிவதைத் தடை செய்வதற்கான முன்மொழிவு மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனாத் கொலம்பகே தெரிவித்தார்.

புர்கா மற்றும் நிகாப் தடை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்

2




## ஒடுக்குமுறைகளைத் தொடர்ந்துகொண்டு ஜெனிவாவில் எவ்வாறு வெல்ல முடியும்?

### அரசைக் கேள்விக்கணையால் துளைத்தெடுக்கின்றார் ரிஷாத் எம்.பி.



இலங்கையில் புர்காவைத் தடைசெய்யும் தீர்மானத்தை அரசு உடனடியாக வாபஸ்பெற வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அதேநேரம், இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் இவ்வாறான செயற்பாடுகள் சர்வதேச நாடுகளிடமிருந்து எமது நாட்டை தனிமைப்படுத்தும் சூழலை ஏற்படுத்துகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2

## மக்கள் கோரிக்கை விடுத்தால் அரசிலிருந்து வெளியேறுவோம்

### சு.க. கூறுகின்றது



அரசிலிருந்து வெளியேறுமாறு எமது மக்கள் கோரிக்கை விடுப்பார்களாயின் அதனைச் செய்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவே இருக்கின்றது.

2

## யாழில் கஞ்சாவுடன் ஆட்டோ சாரதி கைது

ஒரு கிலோ 710 கிராம் கஞ்சாவுடன் ஓட்டோ சாரதி ஒருவர் யாழ் கச்சேரி நல்லூர் வீதிச் சந்தியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய முச்சக்கரவண்டி சாரதியே கைது செய்

2

## வேதாரண்யம் மீனவர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கடற் கொள்ளையர்கள் அரிவாளால் வெட்டி, படகின் இன்ஜினையும் கழற்றி சென்றமையால் 12 மணிநேரப் போராட்டத்துடன் கரை சேர்ந்தனர். இதனால் தமிழகத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள வெள்ளப்பள்ளம் மீனவ கொலனியைச் சேர்ந்தவர் நாகமுத்து (வயது 38). இவருக்கு சொந்தமான பைபர் படகில் அவரது தம்பி மூர்த்தி (வயது 36), ரவிச்சந்திரன் (வயது30) ஆகிய மூவரும் கடந்த 15ஆம் திகதி மதியம் வெள்ளப்பள்ளம் கடற்கரையிலிருந்து மீன்பிடிக்கச் சென்றனர். 3 மீனவர்களும் மீன் பிடித்து விட்டு நேற்று (16ஆம் தேதி) ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர் எனவும் அப்போது நடுக்கடலில் ஓர் அதிவேக படகில் வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் எனச் சந்தேகிக்கும் மூன்று பேர் வெள்ளப்பள்ளம் மீனவர்களின் படகை மறித்து படகில் ஏறி இந்திய மீனவர்கள் 3 பேரையும் வாள் கொண்டு வெட்டியும், கயிறு மற்றும் ஆயுதங்களால் தாக்கியும் காயப்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

இதன்போது இந்திய மீனவர்களின் 5 லட்சம் மதிப்பிலான திசை காட்டும் கருவி, டோர்ச் லைட் ,மீன்கள் போன்றவைகளுடன் அவர்கள் கரைசேரக் கூடாது என்ற நிலையில் படகில் இருந்த இன்ஜினையும் கழற்றி எடுத்து சென்றும், இங்கு வரக்கூடாது என எச்சரித்து அனுப் பினர் எனக் கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து படகில் இன்ஜின் இல்லாததால் உயிருக்கு ஆபத்தான இந்த மூன்று பேரும் படகில் பாயைக் கட்டி காற்றின் உதவியுடன் 12 மணிநேரப் போராட்டத்திற்கு பிறகு இன்று (17 ஆம் திகதி) காலை வெள்ளப்பள்ளம் கடற்கரையில் கரையேறினர். பாதிக்கப்பட்ட மீனவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இ.போ.ச. பஸ்ஸைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து ஹப்புத்தளை பகுதியின் மேல் விகாரகலை எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹப்புத்தளையிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் தரம் 8 இல் கல்வி கற்று வந்த இம்மாணவர்கள் விபத்தில் கடுங்காயங்களுக்குள்ளானதால், ஹப்புத்தளை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, ஆரம்ப சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. அதையடுத்து, அவ்விருவரும் தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, தீவிர சிகிச்சைக்குற்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விரு மாணவர்களும் பாடசாலை விட்டு, வீடு செல்ல இ.போ.ச. பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றனர். பஸ் சென்றுவிட்டதை அறிந்த இம்மாணவர்கள் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்திக்கொண்டு, குறிப்பிட்ட பஸ்ஸைப் பிடிக்கச் சென்றனர். ஆனால், கடத்திச் சென்ற ஓட்டோ, பாதையை விட்டு விலகி, தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது.

## பாகிஸ்தானின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புர்கா தடை தொடர்பில்

மிரிஹான பொலிஸ் நிலை யத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கை அரசின் தேவைக்கேற்ற விதத்திலேயே நாம் செயற்படுகின்றோம்.

புர்கா தடை விடயம் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு, பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் காலத்தில் எவ்வாறான பதில் கிடைக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் – என்றார்.

## அஸாத் ஸாலியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் அதற்கான தோட்டாக்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

நாட்டின் சட்டத்துக்கு முரணான கருத்துக்களை முன்வைத்தார் என்று குறிப்பிடப்பட்டு, மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் அவர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டார்.

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் அவர் தனது காரில் பயணித்துக்கொண்டிருந்தபோதே கைதுசெய்யப்பட்டார். இந்தக் காரிலிருந்தே வெளிநாட்டு கைத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## புர்கா, நிகாப்பைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் ஊடக அறிக்கைகளுக்குப் பதிலளிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புர்கா மற்றும் நிகாப் அணிவதற்குத் தடை விதிப்பதற்கான தீர்மானம் அரசால் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும், தேசியப் பாதுகாப்பு தொடர்பான முன்னெச்சரிக்கையாகவும் புர்கா மற்றும் நிகாப் தடை தொடர்பான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி, தேவையான ஆலோசனைகளின் பின்னரே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குற்றவாளிகளை அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த வேண்டியது அரசின் கடப்பாடாகும். எனவே, அந்த அறிக்கையிலுள்ள முக்கிய விடயங்கள் நிச்சயம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார். காலக்கெடுவும் விதிக் கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை உட்பட அனைத்து இணைப்புகளும் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. எம்மிடம் ஒளிப்பதற்கு ஒன்றும் இல்லை. எனினும், தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் வெளிப்படுத்தப்படமாட்டாது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பில் சிறந்த பெறுபேறு கிடைக்கும் என எதிர்ப்பார்க்கின்றோம். அதன்மூலம் நம்பிக்கை ஏற்படும். தாக்குதலுடன் தொடர்புடைய எவரையும் பாதுகாக்க மாட்டோம். எவருக்கும் வெள்ளையடிப்பு செய்யவேண்டிய தேவை எமக்கு இல்லை. உண்மை கண்டறியப்படும். உரிய சட்ட நடவடிக்கை இடம்பெறும்.

அதேவேளை, ஷரீஆ சட்டம் தவறான அறிவிப்பு மட்டுமல்ல பயங்கரமானது. இந்நாட்டில் தனியார் சட்டங்கள் இருந்தாலும் அவை நாட்டின் பொதுசட்டத்துக்கு கட்டுப்பட்டவை. எனவே, நாட்டின் சட்டத்தை ஏற்கமுடியாது எனக் கூறுவது சட்டவிரோதமாகும். அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

புர்காவைத் தடை செய்வது சட்டவிரோதம் எனச் சிலர் கூறுகின்றனர். அவ்வாறு அல்ல. பிரான்ஸில்கூட பொதுவெளியில் புர்கா அணிய முடியாது. புர்காவைத் தடைசெய்வதற்கு புதிய சட்டம் இயற்றுமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் உள்ளது – என்றார்.

## காணி ஆணைக் குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் அனுப்புமாறு அறிவிக்கப்பட்டதனால் பெரும் எதிர்ப்புக்கள் கிளம்பியதோடு யாழ்ப்பாணம் மாவட்டம் மற்றும் கிளிநொச்சியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இந்த அலுவலக ஆவணங்களை எடுத்துச் செல்லக்கூடாது எனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பும் கடந்த 4 ஆம் திகதி இந்த ஆவணங்களை ஏற்றிச் செல்லப்படவிருந்த சமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இதன்போது யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளரிடம் ஓர் மனுவும் கையளிக்கப்பட்டது. அதைப் பெற்றுக்கொண்ட மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் இந்த விடயம் ஆணைக்குழுவின் முடிவு என தெரியப்படுத்தப்பட்டுள்ளது, அதனால் உடனடியாக ஏதும் செய்ய முடியவில்லை எனப் பதிலளித்தார்.

இதன் பின்பு கடந்த 8ஆம் திகதி மாலை இரகசியமான முறையில் ஆவணங்கள் அனைத்தும் ஆணைக்குழுவின் வாகனத்தில் அநுராதபுரம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கடும் அதிருப்தியை வெளியிட்டனர்.

இந்த நிலையிலேயே இன்று யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் குழாமின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதனையடுத்து அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் நாளை யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இந்த உறுதிமொழியை காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பிதிநிதியும் உறுதி செய்தார்.

## முன்னணியின் வழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி வழங்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினரான வி.மணிவண்ணன் உட்பட ஆறுபேரை ஏற்கனவே கட்சியில் இருந்து நீக்கியதான அறிவித்தலை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைத்திருந்தார். அவ்வாறு அனுப்பிய கடிதத்திற்கு அமைய 21 நாள்களிற்குள் உறுப்புரிமை இழந்தமை தொடர்பான அரச இதழ் பிரசுரிக்கப்படும் என தெரிவத்தாட்சி அலுவலர் மணிவண்ணன் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தார்.

இந்தஆறு பேரில் மணிவண்ணன் உட்பட நால்வர் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள். மற்றைய இருவர் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள். இந்த ஆறு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் தெரிவத்தாட்சி அலுவலரின் இந்த முடிவிற்கு இடைக்காலத் தடைகோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தபோது மாவட்ட நீதிமன்றம் இந்த ஆறு உறுப்பினர்களையும் கட்சியில் இருந்து நீக்கும் முடிவிற்கு இடைக்காலத் தடை விதித்தது.

மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அல்லது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் மாகாண குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனுக்களில் உறுப்பினர் மயூரன் மற்றும் வி.மணிவண்ணனிற்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவுற்று மயூரனின் வழக்கின் தீர்ப்பு இன்றும் மணிவண்ணனின் வழக்கிற்கான தீர்ப்பு 31ஆம் திகதியும் வழங்கப்படும் என நீதிபதிகளான ஏ.எச்.எம்.மனாப் மற்றும் சசி மகேந்திரன் ஆகியோர் திகதியிட்டிருந்தனர். எஞ்சிய நால்வரினது வழக்குகளும் எதிர்வரும் 24ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் உறுப்பினர் மயூரனின் வழக்கு தீர்ப்பிற்காக இன்றைய தினம் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இதன் தீர்ப்பு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## சர்வதேசத்திடம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த போராட்டம், யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் இருந்து பேரணியாக ஆரம்பித்து, சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுவரும் நல்லை ஆதீனம் வரை சென்று நிறைவடைந்தது.

இந்தப் பேரணியில் வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கட்சியினர் உட்பட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சர்வதேசத்திடம் நீதி கோரி கண்ணீர்விட்டு அழுதனர்.

## ஒடுக்குமுறைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் புர்காவைத் தடை செய்வது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முஸ்லிம்களை இலக்கு வைக்கும் இவ்வாறான நிகழ்ச்சி நிரல்களை, அரசு கைவிடுவதாகத் தெரியவில்லை. ஆட்சிக்கு வர உதவிய இனவாதிகளைத் திருப்திப்படுத்தவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. .

அத்தோடு கொரோனா சூழ்நிலையில் முகக்கவசம், மூக்கை மறைத்தல் என்பன கடைப்பிடிக்கப்படும் காலமிது. இதைக் கூடப் புரிந்துகொள்ளாமல், முஸ்லிம்களைப் பழிவாங்கும் மனநிலையில்தான் இந்த அரசு நடந்துகொள்கின்றது.

அரபு நாடுகளின் நண்பன் எனக் கூறும் இந்த அரசு, அரபு நாடுகளிலும் முஸ்லிம் உலகிலும் விரும்பப்படும் ஆடைகளுக்கு அடிப்படைவாதச் சாயம் பூசுவது விந்தையும் வேடிக்கையாகவும் உள்ளது.

இறுதிக்கட்டப் போரிலும் கூட, புர்கா மற்றும் ஹிஜாப் போன்ற முஸ்லிம்களின் கலாசார ஆடைகளுக்குத் தடை விதிக்கப்படவில்லை. அரசு தங்களுக்குப் பிடிக்காத ஒருசில அரசியல்வாதிகளைப் பழிதீர்ப்பதற்காக, ஒட்டுமொத்த முஸ்லிம்களின் கலாசார நம்பிக்கையைக் கொச்சைப் படுத்துவதா? சமூகங்கள் மீதான ஒடுக்குமுறைகளைத் தொடர்ந்துகொண்டு ஜெனிவாவில் எவ்வாறு வெல்ல முடியும்?

இலங்கையில் புர்காத் தடை வருமாக இருந்தால், முஸ்லிம் நாடுகளிலிருந்து மட்டுமல்ல, முகத்தை மறைக்கும் எந்தவொரு முஸ்லிம் பெண்ணும், சுற்றுலாப் பயணியாக இலங்கைக்கு வரப் போவதில்லை.

எமது நாட்டின் சுற்றுலாத்துறையில் இது பாதிப்பை ஏற்படுத்தி, அந்நியச் செலாவணியில் பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதை அரசு புரிந்துகொள்ளல் அவசியம் – என்றார்.

## மக்கள் கோரிக்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

கடந்த பொதுத்தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்கடிப்பதற்குத் திட்டம் வகுத்தனர். சிலர் கழுகு என்றுகூட எம்மையும் கட்சியையும் விமர்சித்தனர். இனிமேல் கிராம மக்கள் வழங்கும் தீர்ப்பின் – கோரிக்கையின் பிரகாரமே எமது தீர்மானம் அமையும்.

பதவிகளைத் துறக்குமாறோ அல்லது வெளியேறுமாறோ எமது மக்கள் கோரிக்கை விடுப்பார்களாயின் அதனை ஏற்றுச் செயற்படுவோம் – என்றார்.

## யாழில் கஞ்சாவுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டவர் ஆவார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 1 கிலோ 170 கிராம் கஞ்சா போதைபொருள் மற்றும் முச்சக்கர வண்டி என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ் நகரப்பகுதியில் பல இடங்களில் கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்து வந்த சந்தேகநபரே கைது செய்யப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரின் நடமாட்டம் தொடர்பில் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே குறித்த கைது இடம்பெற்றுள்ளது.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## போராட்டத்துக்குள் போராட்டம்

இலங்கைத் தீவில், பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப் போக்குக்கு முன்னால் சிறுபான்மையின மக்களின் – குறிப்பாகத் தமிழர்களின் – தினசரி வாழ்வியலே போராட்டம் என்றாகி விட்டது.

பேரினவாத ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு, எமது மொழியை வளர்த்து, எமது பண்பாட்டைப் பேணி, எமது பொருளாதாரத்தை நாமே மேம்படுத்தி, எமது இன அடையாளத்தைப் பாதுகாத்து, எமது பிரச்சினைகளை நாமே தீர்த்து, எமது தனித்துவப் பண்பியல்புகளுடன் நாம் வாழ விரும்புகின்றோம்.

அதற்காக நாம் தினசரி போராட வேண்டியிருக்கின்றது.

தனித்துவமான மொழி, பண்பாடு, வரலாறு, நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு பூர்வீகத் தாயகப் பிரதேசம் போன்றவற்றுடனும் தனித்துவ இன உணர்வுடனும் வாழும் நாம் அவற்றைத் தக்க வைத்துப் பேணுவதற்காகப் போராட வேண்டியிருக்கின்றது.

எங்கள் மண் ஆக்கிரமிக்கப்படாமல் பாதுகாக்க, எமது மொழி அழிந்து விடாமல் பேண, எங்கள் பண்பாடு அள்ளுண்டு போகாமல் தக்க வைக்க, எமது தனித்துவ இன உணர்வு சிதைத்து அழிக்கப்படாமல் உயிரோட்டமாக இருக்க, எங்கள் மக்களின் வேலை வாய்ப்புக்களைக் காப்பாற்ற, கல்வி வசதி, மத உரிமை, இனச் செழிப்பு ஆகியவற்றை வளப்படுத்திக் கொள்ள, தினசரி நாம் போராட வேண்டியிருக்கின்றது.

சிறுபான்மையினர் என்ற வகையில் எல்லா முறைகளிலும் நாம் அடக்கப்படுகின்றோம். சுரண்டப்படுகின்றோம். ஆக்கிரமிக்கப்படுகின்றோம். அடிமைப்படுத்தப்படுகின்றோம். சுய தனித்துவ இழப்புக்கு வல்வந்தமாக ஆள்படுத்தப்படுகின்றோம். எமது தாயக மண்ணிலிருந்து – பூர்வீக இடங்களில் இருந்து – வேரோடும், வேரடி மண்ணோடும் தூக்கி வீசப்படுகின்றோம்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு கொடூரங்களில் தினசரி சிக்கித் தவிக்கின்றோம்.

இவற்றுக்கு மத்தியில் நித்திய போராட்டமே எமது வாழ்வியல் என்றாகி விட்டது.

துண்டு துண்டாகவும், பல்வேறு வித்தியாசமான விவகாரங்களுக்காகவும், வேறுபட்ட பிரச்சினைகள், சிக்கல்களை ஒட்டியும், நமது பிரதேசங்களில் பல்வேறு போராட்டங்கள், பல்வேறு தரப்புகளினால், பல்வேறு முறைமைகளில், பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போராட்டங்கள் எமது வாழ்வியலில் தவிர்க்க முடியாத நியதி என்றாகி விட்டது.

நமது சமூகத்துக்குள் அல்லது சமூகத்தால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள், ஒன்றையொன்று எதிர்ப்பு நிலையில் – முரண்பட்ட போக்குகளில் – சந்திப்பவையாகவோ, எதிர்வு கொள்பவையாகவோ இருக்கக் கூடாது.

நமது எதிரி பலமானவன். அரசுக்குரிய சட்ட அங்கீகாரம் பெற்றவன். அதனால் சகல கட்டமைப்பு வசதிகளையும் கொண்டவன். ஒரு தேசமாக எழுந்து நின்று நம்மை அடக்கி ஒடுக்கி நிற்பவன்.

நாம் பல்வேறு விதமான – பல்வேறு ரகமான – பல்வேறு நோக்கங்களுக்கான – போராட்டங்களைத் தனித்தும் பரவலாகக் கூட்டாகவும் முன்னெடுத்து வருகின்றோம்.

எங்களின் எதிரி பலமானவன் என்பதால் பல சமயங்களில் ஒன்றிணைந்து, ஐக்கியப்பட்டு, ஒரே குரலில் போராட வேண்டியிருக்கின்றது. கருத்திலும், கொள்கையிலும், இலக்குகளிலும், நோக்குகளிலும் வேறுபட்டு நிற்கும் நாம், பொது எதிரியை எதிர்கொள்வதற்காக ஒன்றித்துப் போராட வேண்டியது காலத்தின் கட்டாயமாக நம் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாம் நமக்குள் முரண்பாட்டிலும் இணக்கம் காண வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

போராடுவதற்காக ஒன்றிக்க வேண்டிய நாம், போராட்டத்துக்குள் போராட்டம் நடத்தும் அவலத்துக்குள் இப்போதெல்லாம் அதிகம் சிக்குண்டிருக்கின்றோம் என்று நமக்குத் தோன்றுகின்றது.

அண்மைக்காலத்தில் நாம் பேரெழுச்சியுடன் முன்னெடுத்தது பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான எழுச்சிப் போராட்டம்.

திருக்குறளுக்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி விளக்கவுரை கொடுத்தமை மாதிரி, அந்த எழுச்சிப் பேரணியின் நோக்கம், இலக்கு போன்றவை தொடர்பில் பேரணியின் முடிவில் அதில் பங்குபற்றிய தரப்புகள் தமக்கேற்றபடி விதண்டாவாத விளக்கங்களும், முரணிலை வியாக்கியானங்களும் கூறிக் கொண்டிருந்தமையை அவதானித்தோம்.

இன்று யாழ் நகரில் நடந்த பேரணியிலும் கூட அத்தகைய ஒரு சிறு குழப்பம்.

பேரணிக்கு அழைப்பு விடுத்தவர்கள் ஒரு நோக்கையும், இலக்கையும் முன்வைக்க, கடைசி நேரத்தில் அதற்குள் சேர்ந்து கொண்டோர் வேறு இலக்கையும் நோக்கையும் அதற்கும் செலுத்தி ஒரே குழப்பம்; களேபரம்தான்.

எனவே, இனிமேல் இத்தகைய போராட்டத்துக்குள் ஒன்றிணைவோர், தமக்குரிய நிலைப்பாடுகளையும், போராட்டத்தின் இலக்குகள், செல்நெறிகளையும் அறிந்து, தமக்குள் விடயங்களை நேர்சீராக்கி, ஒற்றை நிலைப்பாட்டை எடுத்த பின்பு போராட்ட சக்திகளின் ஐக்கியத்துக்குள் சம்பந்தப்படுவது நல்லது. சம்பந்தப்பட்ட கட்சிகள், தரப்புகளுக்கு இது சமர்ப்பணம்.

# ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடருக்கும் மாகாண தேர்தலுக்கும் தொடர்பில்லை!

### கெஹலிய தெரிவிப்பு



இந்தியா அல்லது அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்படவில்லை என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறுகின்றது. இந்த விடயத்துக்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

முன்னைய அரசாங்கத்தால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட பிரேரணையின்போது அது காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதனால் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதில் ஏற்பட்ட சட்ட ரீதியிலான தடைகளை நீக்குவதற்காக அரசாங்கம் தற்பொழுது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபை எமது அரசியல் யாப்பில் 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் உயர்கல்வி ஆணைக்குழுவுடன் கல்வி அமைச்சு புரிந்துணர்வு உடன்படிக்கை

கொழும்பு, மார்ச் 18

கல்வி அமைச்சு மற்றும் பாகிஸ்தான் உயர் கல்வி ஆணைக்குழுவுக்கும் இடையில் உயர் கல்வித் துறையில் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் கல்வித் துறையில் பரஸ்பர ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவதற்கும், கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கும் இயலுமான வகையில் உயர் கல்வித் துறையில் கல்வி மற்றும் விஞ்ஞானபூர்வமான அறிவுப் பரிமாற்றங்களுக்கான புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களை ஐந்து வருட காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி அமைச்சு மற்றும் பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் கல்வி ஆணைக்குழுவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் குறித்த காலப்பகுதியில் பாகிஸ்தான் அரசாங்கத்தால் 800 முழுமையான புலமைப் பரிசில்களும், ஆரம்ப பட்டப்படிப்புக்கான கட்டணம் விடுவிக்கப்பட்ட 200 பகுதியளவிலான புலமைப்பரிசில்களும் உள்ளடங்கலாக 1000 புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஆராய்ச்சிகள், மாநாடுகள் மற்றும் வேறு கற்கை நடவடிக்கைகளுக்காக இலங்கை, பாகிஸ்தான பல்கலைக்கழகங்களில் 50 பீட அங்கத்தவர்களை இரு நாடுகளின் பல்கலைக்கழகங்களில் நிலையான காலப் பகுதிக்குப் பரிமாற்றிக் கொள்வதற்கும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ஈஸ்டர் அறிக்கை முழுமையற்றது!

### பேராயர் குற்றச்சாட்டு



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றது என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் –

இந்தத் தாக்குதலை யார் ஏற்பாடு செய்தார்கள், ஆதரித்தார்கள் என்பதைக் குறித்த ஆணைக்குழுவால் கண்டுபிடிக்க முடியவில்லை எனக் கூறியுள்ளார்.

தேவாலயங்களில் தன் மக்கள் எவ்வாறு துண்டு துண்டாக கிழிக்கப்பட்டார்கள் என்பதை தான் கண்டேன் என்றும் அரசியல் நலன்களுக்காக உழைக்கும் தலைவர்களை தாங்கள் விரும்பவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த அறிக்கை சிறிய தடயங்களை வழங்கியிருந்தாலும் தாக்குதலுக்குப் பின்னால் இருப்பவர்களை அது அடையாளம் காணவில்லை, எனவே அது 'முழுமையற்ற அறிக்கை' என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டத்தை தொடருவோம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்த அறிக்கை இரு வாரங்களில்!



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகவும் தேசியப் பாதுகாப்பு தொடர்பான துறை மேற்பார்வைக் குழுவின் அறிக்கை தொடர்பாகவும் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்க நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கை இரு வாரங்களில் சமர்ப்பிக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனைத் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ள நடவடிக்கைகளின் போக்குகள் பற்றிய உண்மைகளையும் பரிந்துரைகளையும் ஆராய்வதற்கு குறித்த குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஓ – பைல்ஸ் என அழைக்கப்படும் இரகசிய பொருள்கள் உள்ளிட்ட தேவையான ஆவணங்களும் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டன எனவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன கூறினார்.

# கொரோனா 2ஆவது அலையை தடுத்தே ஆக வேண்டும் முதலமைச்சர்களுடனான கூட்டத்தில் பிரதமர் மோடி பேச்சு

2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கொரோனா வைரஸ் சீனாவில் தாக்கத் தொடங்கியது. பின்னர் உலகம் முழுவதும் நோய் பரவியது.

இந்தியாவில் கடந்த ஆண்டு மார்ச் மாத அளவில் ஒவ்வொரு மாநிலமாக நோய் தொற்று பரவத் தொடங்கியது. நிலைமை மோசமானதை தொடர்ந்து பிரதமர் நரேந்திரமோடி நாடு முழுவதும் ஊரடங்கை அமுல்படுத்த உத்தரவிட்டார்.

அப்போது பிரதமர் மோடி அனைத்து மாநில முதல் மந்திரிகளுடன் அடிக்கடி ஆலோசனை நடத்தி, உரிய உத்தரவுகளை பிறப்பித்து வந்தார்.

செப்ரெம்பர் மாத அளவில் நோய்த் தொற்று உச்சத்தை தொட்டு பின்னர் படிப்படியாக குறைய ஆரம்பித்தது. இதனால் பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டு ஓரளவு இயல்பு நிலை மீண்டும் திரும்பியது.

இந்தநிலையில் கடந்த சில மாதங்களாக சில மாநிலங்களில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருகிறது. குறிப்பாக மராட்டிய மாநிலம் மோசமான நிலையை எட்டியுள்ளது.

அங்கு தினமும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி வருகிறார்கள். இதேபோல பஞ்சாப், கேரளா, கர்நாடகா, குஜராத், தமிழ்நாடு, மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களிலும் கொரோனா பரவல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தற்போதைய நிலைவரப்படி நாடு முழுவதும் தினமும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அதாவது கடந்த ஆண்டு மோசமான நிலையை எட்டியது போலவே இப்போதும் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்து வருகிறது.



தற்போது 2 லட்சத்து 23 ஆயிரம் பேர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதில் 59 சதவீதம் பேர் மராட்டியத்தைச் சேர்ந்தவர்கள்.

பல மாநிலங்களில் நோய் பரவல் அதிகரித்து இருப்பதையடுத்து மத்திய அரசு உஷார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பாதிப்பு அதிகம் உள்ள மாநிலங்களில் மத்திய அரசு ஆய்வுக்குழு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டது.

அதில் நிலைமை மோசமாக இருப்பது தெரிய வந்தது. எனவே மத்திய அரசு அனைத்து மாநில அரசுகளையும் உஷார்படுத்தி உள்ளது.

கொரோனா மீண்டும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியதை அடுத்து பிரதமர் நரேந்திரமோடி இன்று அனைத்து மாநில முதல் மந்திரிகளுடன் ஆலோசனை நடத்தினார். காணொலி மூலம் ஆலோசனை நடத்தப்பட்டது.

அப்போது பிரதமர் மோடி அனைத்து மாநில அரசுகளும் கொரோனா பரவலை தடுக்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நோய் பரவலை முன்கூட்டியே கண்டறிவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும். பரிசோதனைகளை அதிகப்படுத்த வேண்டும். சுகாதாரக்குழுக்கள் தீவிரமாக கண்காணிக்க வேண்டும். தடுப்பூசிகளை அதிகளவில் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அப்போது பல மாநில முதல் மந்திரிகளும் தங்கள் மாநிலத்தில் நிலவும் நிலைமை குறித்து பிரதமரிடம் எடுத்துக் கூறினார்கள். அதற்கு பிரதமர், மாநில அரசுகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்யும் என்று உறுதி அளித்தார்.

தமிழக முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தேர்தல் பிரசாரத்தில் இருப்பதால் பிரதமர் உடனான ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பங்கேற்கவில்லை. தமிழக தலைமைச் செயலாளர் இராஜீவ் ரஞ்சன், சுகாதாரத்துறை செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். மேற்குவங்க முதல் மந்திரி மம்தா பானர்ஜி, பிரதமரின் ஆலோசனைக் கூட்டத்தை புறக்கணிப்பதாக அறிவித்தார்.

## மோடியின் ஆலோசகர் திடீர் இராஜினாமா

### பின்னணி என்ன?



பிரதமர் நரேந்திர மோடியின் முதன்மை ஆலோசகராக பதவி வகித்து வந்தவர் பி.கே. சின்கா (வயது 65). இவர் திடீரென தனது பதவியை நேற்று இராஜினாமா செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அவர் தனிப்பட்ட காரணங்களுக்காக பதவி விலகி இருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் 1977 ஆம் ஆண்டின் உத்தரபிரதேச மாநில ஒதுக்கீடு ஐ.ஏ.எஸ். அணியைச் சேர்ந்தவர். இவர் பிரதமர் அலுவலகத்தில் சிறப்பு அதிகாரியாக குறுகிய காலம் பதவி வகித்ததைத் தொடர்ந்து, 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பிரதமரின் முதன்மை ஆலோசகராக நியமிக்கப்பட்டு, அந்த பதவியில் தொடர்ந்தார்.

4 ஆண்டு காலம் அதிகாரமிக்க மத்திய மந்திரிசபையின் செயலாளராகவும் இவர் பதவி வகித்து இருக்கிறார்.

பிரதமரின் பதவிக்காலம் வரையில் அல்லது அடுத்த உத்தரவு வரையில், இரண்டில் எது முதலில் வருகிறதோ அது வரையில் அவரது பதவி தொடரும் என்று நியமன உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தாக தெரியவந்துள்ளது.

ஆனால் இதற்கு மாறாக அவர் தாமாகவே பிரதமரின் முதன்மை ஆலோசகர் பதவியில் இருந்து விலகி இருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

## வங்கிகள் தனியார்மயமாக்கல் ராகுல்காந்தி எதிர்ப்பு தெரிவிப்பு



மத்திய அரசு நடப்பு ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இரண்டு பொதுத்துறை வங்கிகளை தனியார் வசம் ஒப்படைக்கும் அறிவிப்பினை வெளியிட்ட நிலையில் நாடு முழுவதும் வங்கி ஊழியர்கள் 2 நாள் வேலை நிறுத்தத்தை அறிவித்தனர்.

இதுகுறித்து மத்திய அரசுடன் நடந்த பேச்சில் உடன்பாடு ஏற்படாததால் வங்கி ஊழியர்கள் அறிவித்தபடி வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், வங்கிகள் தனியார்மயத்துக்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள வங்கி ஊழியர்களுக்கு நான் ஆதரவு தெரிவிக்கிறேன். மத்திய அரசு, இலாபத்தை தனியார்மயமாக்குகிறது. நஷ்டத்தை தேசியமயமாக்குகிறது. பொதுத்துறை வங்கிகளை மோடியின் நண்பர்களுக்கு விற்பதால் நாட்டின் நிதி பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என பதிவிட்டுள்ளார்.

## விபத்தில் சிக்கிய விமானப்படை விமானம்

இந்திய விமானப்படையின் மிக்21 பைசன் போர் விமானம் இன்று விபத்தில் சிக்கியது. மத்திய இந்திய விமானப்படை தளத்தில் இருந்து மிக்.21பைசன் விமானம் வழக்கமான பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டது. அப்போது எதிர்பாராத விதமாக விமானம் விழுந்து நொறுங்கியது. இதில், விமானத்தை ஓட்டிச்சென்ற குரூப் கப்டன் ஏ.குப்தா உயிரிழந்தார்.



போர் விமானம் விபத்துக்குள்ளாகி, குரூப் கப்டன் உயிரிழந்த செய்தியை விமானப்படை தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்து, அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளது. அத்துடன், விமான விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் கூறி உள்ளது.

## நேற்று மட்டும் 28,903 பேருக்கு கொரோனா

### மத்திய சுகாதார அமைச்சகம் அறிவிப்பு

நடப்பு வருடத்தில், இதுவரை இல்லாத அளவாக இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 28 ஆயிரத்து 903 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதே போன்று ஒரே நாளில் பெருந்தொற்று பாதிப்பால் பலியானவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்து 188 ஆக அதிகரித்துள்ளது. 2 லட்சத்து 34 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டாலும் கூட, வைரஸ் பரவலை தடுப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகளான முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல் உள்ளிட்டவற்றை பொதுமக்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி மத்திய சுகாதார அமைச்சகம் வீடியோ வெளியிட்டுள்ளது.

## தமிழ்நாடு உள்பட நான்கு மாநிலங்களில் பணம், பொருள்கள் பறிமுதல் - தேர்தல் ஆணையம்

சட்டப்பேரவை தேர்தல் நடைபெற இருக்கும் தமிழ்நாடு உள்பட 4 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் பறக்கும் படையினர் நடத்திய சோதனையில், இதுவரை இந்திய மதிப்பில் 331 கோடி ரூபா மதிப்பிலான பணம் மற்றும் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பணப்பட்டுவாடா மற்றும் கறுப்பு பணத்தை கட்டுப்படுத்தும் விதமாகவும் கண்காணிப்பை தீவிரப்படுத்துவதற்காகவும், தேர்தல் செலவின பார்வையாளர்கள் 295 பேர் களமிறக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

## நடுவானில் பிறந்த அழகான குழந்தை



பெங்களூரில் இருந்து ஜெய்ப்பூருக்கு சென்ற இண்டிகோ விமானத்தில், நடுவானில், பெண் ஒருவருக்கு அழகான குழந்தை பிறந்தது.

விமானம் பறக்கத் தொடங்கிய சிறிது நேரத்தில் அந்த பயணிக்கு பிரசவ வலி ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து விமானத்தில் இருந்த பெண் மருத்துவர் சுபஹானா நஸீர் உதவியுடன், விமானப் பெண் ஊழியர்கள் பிரசவம் பார்த்தனர்.

இதனிடையே ஜெய்ப்பூர் விமான நிலையத்திற்கு தகவலும் அளிக்கப்பட்டு மருத்துவ குழுவினர் அம்புலன்ஸுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டனர்.

தாயும் சேயும்நலமாக இருக்கும் நிலையில், ஜெய்ப்பூர் வந்த மருத்துவர் சுபஹானாவுக்கு இண்டிகோ நிறுவனம் நன்றி தெரிவிக்கும் வாழ்த்து அட்டையை வழங்கி கௌரவித்தது.

A/L PHYSICS
2023 Batch
zoom Class (Bilinual)
ஆரம்பம்:-18/032021 (08.15 PM )
2022, 2021 & Repeat
Batch வகுப்புகளும் நடைபெறுகின்றன.
T.P:-0765463054
A.Jenukananth
B.Sc Engineering (Hons) (UOM) AMIE (SL)

## Fox நதியில் பாட்ரிக் தினத்திற்காக பச்சை நிற சாயம்



புனித பாட்ரிக் தினத்தையொட்டி அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணத்தில் உள்ள fox நதி பச்சை வண்ணமாக மாற்றப்பட்டது.

கத்தோலிக்க மத குருவான புனித பாட்ரிக்கை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் மாதம் 17ஆம் திகதி புனித பாட்ரிக் தினம் கொண்டாடப்படுகிறது.

பசுமையை உணர்த்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும், பாட்ரிக் தினத்தன்று அனைவரும் பச்சை நிற உடையணிந்து, அடையாள சின்னங்களில் பச்சை நிற விளக்கு ஒளிரவைக்கப்படுகிறது.

இந்த சூழலில் இல்லினாய்ஸில் பாயும் fox நதி முழுவதும் பச்சை நிற சாயம் தெளிக்கப்பட்டது.

# காற்று மாசுபாட்டை கண்டுபிடிக்க உதவும் புதிய செயற்கைக்கோள் ஏவப்படவுள்ளது

டுபாய் மாநகராட்சி சுற்றுச்சூழல் துறையின் இயக்குநர் அலியா அல் ஹர்முதி கூறியதாவது:–

ஐக்கிய அரபு இராச்சியத்தின் காற்று மாசுபாடு தொடர்பாக அளவீடு செய்யும் வகையில் 'டிஎம்சாட் 1' என்ற புதிய செயற்கைக்கோள் உருவாக்கப்பட்டு உள்ளது. முகம்மது பின் ராஷித் விண்வெளி ஆய்வு மையம் மற்றும் டுபாய் மாநகராட்சி ஒத்துழைப்புடன் இந்த திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்த செயற்கைக்கோள் வருகிற 20 ஆம் திகதி டுபாய் நேரப்படி காலை 10.07 மணிக்கு கஜகஸ்தான் நாட்டில் உள்ள விண்வெளி மையத்தில் இருந்து ஏவப்படுகிறது. 15 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக்கோள் டொரண்டோ பல்கலைக்கழகத்தின் விண்வெளி ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டது. இந்த செயற்கைக்கோள் மூலம் கிடைக்கும் தகவல்கள் அமீரக சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

அதன் அடிப்படையில் ஐக்கிய அரபு இரசியத்தில் இருக்கும் காற்று மாசுபாடு குறித்து தெரிந்து கொள்ள முடியும். மத்திய கிழக்கு நாடுகளில் புழுதிக் காற்று பொதுவாக இருக்கும். இதன் காரணமாக பொதுமக்களுக்கு சுவாச கோளாறு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. இந்த காற்று மாசுபாட்டை தெரிந்து கொண்டு அதற்கேற்ப பொது



மக்களை எச்சரிக்கை செய்யும் வகையிலும், தேவையான முன்னெச்சரிக்கை மேற்கொள்ளவும் இந்த செயற்கைக்கோள் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த செயற்கைக்கோளில் உள்ள கருவிகள் பல்வேறு வடிவங்களில் படங்களை எடுக்கும் வசதி கொண்டது ஆகும். இது ஏவப்பட்ட சில நாள்களில் முதல் படம் கிடைப்பதற்காக வாய்ப்புள்ளது. இது பூமியில் இருந்து 730 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வட்டப்பாதையில் இருக்கும் வகையில் நிலை நிறுத்தப்படும். – இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பிரேஸிலை உலுக்கும் கொரோனாவின் எதிரொலி 4 ஆவது முறையாக சுகாதார அமைச்சர் மாற்றம்

கொரோனா வைரஸ் பாதிப்பில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக 2ஆவது இடத்தில் பிரேஸில் உள்ளது. அங்கு கொரோனாப் பலி எண்ணிக்கை 2 லட்சத்து 80 ஆயிரத்தை நெருங்கி கொண்டு இருக்கிறது.

அதிபர் ஜெயிர் போல்சனரோ தலைமையிலான அரசு கொரோனா வைரஸை முறையாக கையாளவில்லை என்கிற குற்றச்சாட்டு உள்ளது.

ஜெயிர் போல்சனரோ அதிபராக பதவி ஏற்றது முதல் சுகாதார அமைச்சராக இருந்து வந்த லூயிஸ்ஹென்ரின் மாண்டெட்டா கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவருக்கு பதிலாக நெல்சன் டீச் புதிய சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆனால் இவரும் சில வாரங்களிலேயே தனது பதவியை இராஜினாமா செய்தார். அதனைத் தொடர்ந்து இராணுவ ஜெனரல் எட்வர்டோ பசுவெல்லோ இடைக்கால சுகாதார மந்திரியாக நியமிக்கப்பட்டார். பின்னர் அந்த பதவிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டார்.

மருத்துவத் துறையில் எந்த வித அனுபவம் இல்லாத இராணுவ ஜெனரலை சுகாதார அமைச்சராக நியமித்ததற்கு விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், பிரேஸிலில் கொரோனா பரவத் தொடங்கியதில் இருந்து 4ஆவது முறையாக சுகாதாரத் துறை அமைச்சர் மாற்றப்பட்டுள்ளார்.

பிரேசில் சுகாதாரத் துறைக்கு புதிய அமைச்சரை நியமித்துள்ளதாக அதிபர் ஜெயீர் போல்சனரோ அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், எட்வர்டோ பசுவெல்லோ சுகாதாரத் துறை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, டாக்டரும் இருதயவியல் சங்கத்தின் தலை



வருமான மார்செலோ குயிரோகா புதிய சுகாதாரத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

# பிரான்சில் கொரோனாவின் மூன்றாவது பேரலை தீவிரம் நாடாளுமன்றத்தில் பிரதமர் ஜீன் காஸ்டெக் தெரிவிப்பு



கொரோனாவின் மூன்றாவது பேரலை எழுந்துள்ளதாக பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது.

நவம்பர் மாதம் தொடங்கி இந்த மாதத்தில் தான் அதிகபட்சமான பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாக அந்நாட்டு பிரதமர் ஜீன் காஸ்டெக் நாடாளு மன்றத்தில் தெரிவித் துள்ளார்.

முதன் முறையாக ஒரே வாரத்தில் 29 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதால், அங்குள்ள மருத் துவமனைகள் மீது அழுத்தம் அதிகரித்து வருகிறது.

புதிய ஊரடங்கு நடைமுறை தவிர வேறு வழியில்லையா என்று அரசு சுகாதாரத்துறை ஆலோசித்து வருகிறது.

மற்ற ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா போன்றவை பொதுமக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி போடும் பணியைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் பிரான்ஸில் அந்தப் பணியும் மந்தமாகவே நடைபெறுகிறது.

## சிரியாவில் பயங்கரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேல் ராணுவம் வான்வழித் தாக்குதல்

சிரியாவில் பயங்கரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் வான்வழித் தாக்குதலில் ஈடுபடுவது தொடர்கதையாகிவருகிறது.

இந்த நிலையில் நேற்று சிரியாவின் தலைநகர் டமாஸ்கசில் (Damascus) இஸ்ரேல் சரமாரியாக ஏவுகணைகளை வீசி தாக்குதலில் ஈடுபட்டது.

இந்த வான்வழி தாக்குதல் சுமார் 15 நிமிடங்கள் நீடித்ததாகவும், எனினும் இந்த தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை என அப்பகுதியில் வசிக்கும் மக்கள் தெரிவித்தனர்.




## ரஷ்யாவில் 8,998 பேருக்கு கொரோனா; 427 பேர் பலி

ரஷ்யாவில் கடந்த சில வாரங்களாக கொரோனா வைரஸ் தொற்று சற்று குறைந்து வருகிறது. கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் தற்போது ரஷ்யா 4 ஆவது இடத்தில் உள்ளது.

ரஷ்யாவில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 8,998 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ரஷ்யாவில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை தற்போது 44,18,436 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா தொற்றுக்கு மேலும் 427 பேர் உயிரிழந்ததால், அங்கு பலியானோர் எண்ணிக்கை 93 ஆயிரத்து 364 ஆக உயர்ந்துள்ளது.

ரஷ்யாவில் இதுவரை கொரோனா தொற்றில் இருந்து 40,24,975 பேர் சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்போது வரை 3,00,097 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

## ஜோ பைடனை தோற்கடிக்க ரஷ்ய அதிபர் சதி செய்தாரா? அமெரிக்க உளவுத்துறை அறிக்கையில் பரபரப்பு தகவல்



அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோ பைடனை தோற்கடிக்க ரஷ்ய அதிபர் புடின் முயற்சித்தார் என அமெரிக்க அரசின் உளவுத் துறை அறிக்கையில் பரபரப்பான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பைடன் மீது தவறான, நிரூபிக்கப்படத குற்றச்சாட்டுக்களை, ட்ரம்ப் ஆதரவாளர்கள் மூலம் பரப்ப புடினும் அவரது நிர்வாகமும் முயன்றதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக ட்ரம்பின் தனிப்பட்ட வழக்கறிஞரான ரூடி ஜியுலானிக்கு அதில் முக்கிய பங்கு இருந்தது என கூறப்பட்டுள்ளது.

உக்ரேன் நிறுவனத்துடன் வர்த்தக உறவு வைத்துள்ள பைடனின் மகன் ஹன்டர் பைடன் மீது உள்ள நிரூபிக்கப்படாத மோசடி வழக்கில், பைடனையும் சேர்க்க, ட்ரம்ப் ஆதரவாளர்கள் ரஷ்ய அரசின் உதவியுடன் திட்டமிட்டனர் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேசத்திற்கான முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்






மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம், நாடாளுமன்ற உறுப்பினரும், காத்தான்குடி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான நஷீர் அஹமட் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை காத்தான்குடிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கடந்த ஆண்டு இப்பிரதேச செயலகப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதி கிடைக்கப்பெற வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

மேலும் இப்பிரதேசத்தின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் ஆராயப்பட்டன.

அதிலும் குறிப்பாக காத்தான்குடியில் மிக முக்கிய தேவையாக இருக்கின்ற வடிகான் அமைப்பு, மனைப்பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உ. உதயசிறிதர் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.எம்.சில்மியா, உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.தனுஜா மற்றும் சுகாதாரத் துறையினர் உட்பட மாவட்டத்தின் சகல திணைக்களங்களின் தலைவர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டமாவடியில் ஆற்றில் மிதந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு



நீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்ட நபரொருவரின் சடலம் இன்று காலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஆற்றில் மிதந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தோணி ஒன்றில் தனிமையாக சென்ற நபரே இவ்வாறு நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மரணமடைந்த நபர் ஓட்டமாவடியைச் சேர்ந்த 35 வயதுடைய சேகு இஸ்மாயில் சப்ராஸ் (மீனி) என்பவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருக்கோவில் நேருபுரம் பிரதான வீதியில் டிப்பர் மோட்டார் சைக்கிள் பாரிய விபத்து

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாண்டியடி நேருபுரம் பொத்துவில் பிரதான வீதியில் டிப்பர் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதியதில் பெரும் விபத்து ஏற்பட்டு ஒருவர் காயமடைந்துள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்தானது இன்று புதன்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளது பொத்துவில் பிரதேசத்தில் இருந்து அக்கரைப்பற்று நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டு இருப்பதாக திருக்கோவில் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் முலம் தெரிய வந்துள்ளது.

இவ் டிப்பர் வாகனம் பொத்துவில் பிரதேசத்தில் இருந்து ஆழ்கடல் மீன்பிடி வோட் வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை ஏற்றிக் கொண்டு அக்கரைப்பற்று நோக்கி பயணித்துக் கொண்டு இருந்த வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த வீதி தடுப்புக்களை உடைத்துக் கொண்டு டிப்பர் வாகனம் பள்ளத்தில் குடைசாய்ந்து கிடப்பதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

இவ்விப்பதில் மோட்டார் சைக்கில் பாரிய சேதமடைந்துள்ளதுடன் அதனை செலுத்திச் சென்றவர் காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பியதுடன் இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு - தேற்றாத்தீவு உப்புவெட்டிக்குளம் புனரமைப்புத் திட்டம் நேற்று ஆரம்பமாகியது

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட தேற்றாத்தீவு உப்பு வெட்டிக்குளம் புனரமைப்பு பணிகள் நேற்று செவ்வாய்கிழமை மாலை இடம்பெற்றன.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன், பிரதேச அபிவிருத்திக்குழுவின் உப தலைவர் பரமசிவம் சந்திரகுமார், ஆகியோர் இதன்போது கலந்து கொண்டு அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

மேலும் இந்நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெத்தினம், மற்றும் நிர்ப்பாசன பொறியியலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டரை வயது சிறுமி கிணற்றில் வீழ்ந்து மரணம்

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேற்றாத்தீவு பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றிலிருந்து மீட்ட இரண்டரை வயது சிறுமி மரணமடைந்துள்ளார் எனக் களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

தேற்றாத்தீவு பாலமுருகன் வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் இரண்டாவது பிள்ளையான உதயராஜ் ஹம்சவர்த்தினி இவ்வாறு உயிரிழுந்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை தனது வீட்டில் வழமை போல் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி தனது விளையாட்டுப்பொருள் கிணற்றில் வீழ்ந்ததனைக்கண்டு அதனை எடுக்க முற்பட்டபோது தவறுதலாக கிணற்றில் வீழ்ந்துள்ளார்.

கிணற்றில் வீழ்ந்துள்ளதாக அறிந்து கொண்ட குறித்த சிறுமியின் தகப்பனார் கிணற்றில் இருந்து மீட்ட சிறுமியை களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சையழிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த சிறுமி உயிரிழந்துள்ளார்.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதவான் க.ஜீவராணி அவர்களின் உத்தரவிற்கமைவாக களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தை பார்வையிட்டதுடன் பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற் கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தும் படி பொலி ஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அம்பாறை நகர திட்டமிடல் குறித்த சிறப்பு கலந்துரையாடல்





அம்பாறை நகர திட்டமிடல் குறித்த சிறப்பு கலந்துரையாடல் நேற்று இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் தலைமையில் அம்பாறை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அம்பாறை நகரத்தின் எதிர்கால திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதுடன் அம்பாறை பொதுச் சந்தையின் வளர்ச்சி, நடைபாதைகள் திறத்தல், அரசு குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதியை ஒரு வர்த்தக நகரமாக மாற்றுவது, பொதுப் பூங்காவை நிர்மாணித்தல் மற்றும் வனவிலங்கு மண்டலத்தின் விடுதலை குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ. டி. வீரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் திலக் ராஜபக்ஷ, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம் எல். பண்டாரநாயக்க உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## கிண்ணியா - கொழும்பு வீதியில் விபத்து சம்பவ இடத்தில் பலியான 68 வயது நபர்

கிண்ணியா - கொழும்பு வீதியில் முனைசேனை பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தொன்றில், 68 வயதான வயோதிபர் சம்பவ இடத்திலேயே உயிரிழுந்துள்ளார்.

கிண்ணியா வில்வெளி பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதான டெயிலர் நசீம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிண்ணியாவில் இருந்து இவர் சிறியரக மோட்டார் சைக்கிள் ஒன்றில் வில்வெளியில் உள்ள தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த டிப்பர் வாகனம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் அவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

சடலம் கிண்ணியா வைத்தியசாலையில் இருந்து பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 3ஆவது டி20 கிரிக்கெட் போட்டி




## ஜோஸ் பட்லர் அதிரடியில் இங்கிலாந்து வெற்றி

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3ஆவது டி20 கிரிக்கெட் போட்டி அகமதாபாத் நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது.

கே.எல். ராகுல், ரோகித் சர்மா ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினர். கே.எல் ராகுல் ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். ரோகித் சர்மா 15 ஓட்டங்களிலும், இஷான்கின் 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழந் தனர். இதனால் இந்தியா 24 ஓட்டங்களுக்குள் 3 விக் கெட்டை இழந்தது.

4ஆவது விக்கெட்டுக்கு விராட் கோலியுடன் ரிஷப் பண்ட் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பாக விளை யாடியது. இந்தியா 11.1 ஓவரில் 64 ஓட்டங்கள் எடுத்தி ருந்த நிலையில் துரதிரஷ்டவசமாக ரிஷப் பண்ட் 25 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன் அவுட் ஆனார். அடுத்து வந்த ஷ்ரேயாஸ் அய்யர் 9 ஓட்டங்கள் வெளியேறினா லும் மறுமுனையில் விராட் கோலி சிறப்பாக விளையாடி 17ஆவது ஓவரின் கடைசி பந்தை பவுண்டரிக்கு விரட்டி 37 பந்தில் அரைச்சதம் அடித்தார்.

இந்தியா 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்கள் அடித்தது. ஹார்திக் பாண்ட்யா 15 பந்தில் 17 ஓட்டங்கள் எடுத்து கடைசி பந்தில் ஆட்டமிழந்தார். விராட் கோலி 46 பந்தில் 8 பவுண்டரி, 4 சிக்சருடன் 77 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து அணியில் மார்க்வுட் 3 விக்கெட்டும், கிறிஸ் ஜோர்டான் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் 157 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து பேட்டிங் செய்தது. ஜேசன் ராய், ஜோஸ் பட்லர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ஜேசன் ராய் 9 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து தாவித் மலான் களம் இறங்கினர். மலான் நிதானமாக விளை யாட ஜோஸ் பட்லர் ருத்ரதாண்டவம் ஆடினார். 26 பந்தில் அரைச்சதம் அடித்தார். 3ஆவது விக்கெட்டுக்கு பட்லர் உடன் பேர்ஸ்டோவ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி இங்கிலாந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது.

இங்கிலாந்து அணி 18.2 ஓவரில் 158 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற் றது. பட்லர் 52 பந்தில் 5 பவுண்டரி, 4 சிக்சருடன் 83 ஓட்டங்கள் எடுத்தும், பேர்ஸ்டோவ் 28 பந்தில் 5 பவுண் டரியுடன் 40 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்திய அணி சார்பில் சாஹல் 4 ஓவரில் 41 ஓட்டங் களை விட்டுக்கொடுத்து 1 விக்கெட் வீழ்த்தினார். புவே னேஷ்வர் குமார் 4 ஓவரில் 27 ஓட்டங்களை விட்டுக்கொடுத் தார். ஷர்துல் தாகூர் 3.2 ஓவரில் 36 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார். ஹார்திக் பாண்ட்யா 3 ஓவரில் 22 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்தார். வொஷிங்டன் சுந்தர் 4 ஓவரில் 26 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட் சாய்த்தார்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 2:1 என முன்னிலையில் உள்ளது.

# ஊழல் வீரர்களுக்கு 8 ஆண்டுகள் தடை!

கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த இருப துக்கு இருபது உலக கோப்பை கிரிக்கெட் போட் டிக்கான தகுதிச் சுற்றின்போது ஐக்கிய அரபு அமீரக கிரிக்கெட் வீரர்கள் மொஹமட் நவீட் மற்றும் ய்மன் அன்வர்பட் ஆகியோர் போட்டி யின் நிலையைத் தீர்மானிக்கும் சூதாட்டத்தில் ஈடுபட முயற்சித்தது விசாரணைகளில் அறியப் பட்டது. சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) ஊழல் தடுப்பு விதிமுறையை மீறிய அவர்கள் உடனடியாக இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் ஐ.சி.சியின் ஒழுங்கு நடவடிக்கை குழு நடத்திய விசாரணை முடிவில் இருவருக்கும் தலா எட்டு ஆண்டுகள் தடை விதிக்கப்படுவதாக நேற்று அறிவிக்கப்பட்டது. அவர்கள் அணியிலிருந்து இடை நீக்கம் செய் யப்பட்ட 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத் தில் இருந்து தடைக் காலம் கணக்கில் எடுத் துக் கொள்ளப்படும்.




ஐக்கிய அரபு அமீரக அணியின் முன்னாள் தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான 33 வயதான மொஹமட் நவீட், 39 ஒரு நாள் போட் டிகளிலும் 31 இருபதுக்கு இருபது போட்டிக ளிலும் விளையாடியுள்ளார். ஆரம்ப வரிசை துடுப்பாட்டக்காரரான ய்மன் அன்வர் (42) அமீரக அணிக்காக 40 ஒரு நாள் மற்றும் 32 இருபதுக்கு இருபது போட்டிகளில் பங்கேற்றி ருக்கிறார்.



# சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார்

## டைகர் வூட்ஸ்

அமெரிக்க கோல்ப் வீரரான டைகர் வூட்ஸ் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த மாதம் 24ஆம் திகதி காரில் பயணம் செய்து கொண்டிருந் தார்.

ரோலிங் ஹில் எஸ்டேட்ஸ் பகுதியில் சென்றபோது திடீரென அவரது கார் புல் வெளி பகுதியில் உருண்டு கவிழ்ந்தது. காரில் தனியாக பயணித்த வூட்ஸ் பலத்த காயம் அடைந்தார்.

தகவலறிந்து தீயணைப்பு வீரர்கள் மற் றும் மருத்துவக் குழுவினர் அங்கு சென்று விபத்தில் சிக்கிய டைகர் வூட்ஸை மீட்டனர்.

காலில் அதிகளவில் காயம் ஏற்பட்டுள் ளதால் மருத்துவமனையில் அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து அங்கு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த டைகர் வூட்ஸ் நலமு டன் வீடு திரும்பினார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், நான் வீடு திரும்பி விட் டேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரி வித்துக் கொள்கிறேன். மருத்துவமனை யில் சிகிச்சை பெற்றபோது ஆதரவளித்த மக்கள் அனைவருக்கும் நன்றி என பதி விட்டுள்ளார்.




# டோக்கியோ ஒலிம்பிக் தீப ஓட்டம் பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல்!

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கடந்த வருடம் நடைபெறவேண்டிய ஒலிம்பிக் போட்டிகள் கொரோனா அச்சுறுத்தலால் ஓராண்டுக்குத் தள்ளிவைக்கப்பட்டு இவ்வருடம் ஜூலை 23ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8 வரை நடைபெறவுள்ளன. இதற்கான ஒலிம்பிக் தீபத் தொடர் ஓட்டம் வருகிற 25 ஆம் திகதி புகுஷிமாவில் ஆரம்ப மாகி அடுத்த 121 நாள்களுக்கு ஜப்பான் முழுவதும் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஏறத்தாழ பத்தாயிரம் பேர் தீபத்தை ஏந்தி ஓடவுள்ளனர். தீப ஓட்டத்தை சாலையோரம் நின்று ஏராளமானோர் பார்த்து ரசித்து உற்சாகப்படுத்துவது வழமை என்பதால் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு இறுக்கமான விதிமுறைகள் அறிவிக்கப்பட் டுள்ளன.

பார்வையாளர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும், சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் என்றும் உரக்க ஒலியெழுப்புவதைத் தவிர்த்து அமைதி யான வழியில் தீபம் ஏந்திச் செல்பவர்களை உற்சாகப்படுத் தும்படியும் போட்டி அமைப்பாளர்கள் கோரியுள்ளனர்.

# பெண்கள் கிரிக்கெட் தரவரிசையில் தென்னாபிரிக்காவின் லிஸெல் லீ முதலிடம்

பெண்கள் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் வீராங்கனை களின் புதிய தரவரிசைப் பட்டியல் நேற்று வெளியானது.

இதில், இந்திய அணிக்கெதிராக சிறப்பாக விளையாடி வரும் தென்னாபிரிக்க ஆரம்ப துடுப்பாட்டக்காரரான லிஸெல் லீ 7 இடங்கள் முன்னேறி மொத்தம் 773 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இந்திய அணியுடனான தொடரில் அவர் 4 போட்டிகளில் விளையாடி ஒரு சதம், 2 அரைச்சதங்கள் உட்பட 288 ரன்கள் குவித்துள்ளார்.

தென்னாபிரிக்க வீராங்கனைகளில் தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறிய ஒரே வீராங்கனை இவர் தான். இவர் 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதமும் முதலிடத் தில் இருந்திருக்கிறார். இதுவரை முதலிடத்தில் இருந்த இங் கிலாந்தின் டம்மி பீமொன்ட் 2 ஆவது இடத்துக்கு பின்தள் ளப்பட்டுள்ளார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியாவின் ஜெஸ் ஜொனாசென் தொடர்ந்தும் முதலிடத்திலிருக்கிறார்.



# மியன்மார் இராணுவ ஆட்சி; இலங்கையில் எதிர்ப்பு போர்!







மியன்மார் இராணுவ ஆட்சியோடு இலங்கை அரசு உறவாட வேண்டாம் எனவும் மியன்மாரில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாக்குமாறும் கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னாள் கிழக்கு வாழ் பொதுமக்கள், ஒன்றிணைந்து கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த சிவில் அமைப்புகள், போரால் பாதிக்கப்பட்ட சமூகப்பிரிவினர், பெண்கள் அமைப்புகள் மற்றும் இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் பொதுமக்கள், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மியன்மார் இராணுவ ஆட்சியுடன் கொண்டுள்ள அனைத்துவிதமான உறவுகளையும் பரிமாற்றங்களையும் நிறுத்துமாறு இலங்கை அரசைக் கோருகிறோம்.

மனித உரிமைகளை மீறுவதில் மிகவும் அபகீர்த்திக்குள்ளான அரசுகளில் ஒன்றாக ஆசியாவிலும் உலக அளவிலும் மியன்மார் அரசு உருவாகியுள்ளது.

2021 மாசி மாதம் முதலாம் திகதி, மூத்த இராணுவ ஜெனரல் மின் ஆங் லாயிங் மற்றும் அவரின் இராணுவம் மியன்மாரில் ஜனநாயகமாக தெரிவுசெய்யப்பட்ட தேசிய ஜனநாயக லீக் தலைமையிலான அரசை இராணுவ சதியின் மூலம் கைப்பற்றியதோடு, மக்களின் தலைவர்களான ஆங் சாங் சூகி , நாட்டின் ஜனாதிபதி வின் மையின்ட் ( அடங்கலான பல தலைவர்களையும் கைதுசெய்து வீட்டுக்காவலில் வைத்தனர்.

நாட்டின் தலைநகரான யங்கூன் மின்சார வெட்டால் இருளில் மூழ்கடிக்கப்பட்டதோடு நாடுமுழுதும் இணையத் தொடர்புகள் முடக்கப்பட்டன.

மக்கள் வீதிகளில் இறங்கி தமது தலைவர்களை விடுவிக்குமாறு கோரி போராட்டம் செய்ததோடு தமது ஜனநாயக உரிமைகளுக்காக குரல்கொடுத்தனர்.

ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிரான இனப்படுகொலை சார்ந்து குற்றம்சாட்டப்பட்டுள்ள மியன்மார் இராணுவம் அமைதியாகப் போராடியவர்களுக்கு எதிராக கொடூரமான தாக்குதலை மேற்கொண்டது. இதுவரையில் 120 இற்கும் அதிகமானோர் படுகொலை செய்யப்பட்டிருப்பதுடன் பலர் காயப்பட்டுள்ளனர்.

இளம்பெண்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளமையுடன் காயப்பட்டுள்ளனர். படுகொலைக்குள்ளானோரில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் 25 வயதுக்கும் குறைந்தவர்களாவர் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் எதேச்சாதிகாரமாக கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெண்களும் அடங்குவர். காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தமது குடும்பத்துடன் தொடர்பு கொள்ளவோ சட்டத்தரணிகளை அணுகவோ அனுமதிக்கப்படவில்லை.

கைதுசெய்யப்பட்ட தமது பிள்ளைகள் எங்கு வைக்கப்பட்டுள்ளனர் என பல குடும்பத்தினருக்கு தெரியாது.

போராட்டக்காரர்களுக்கும் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கும் எதிராக இராணுவம் சித்திரவதைகளையும் அட்டூழியங்களையும் மேற்கொண்டுவருகிறது.

ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ், மியன்மாரில் நடைபெறும் அட்டூழியங்களை கண்டித்துள்ளதோடு சிவில் ஆட்சிமுறைமைக்கு திரும்புமாறு கோரியுள்ளார்.

மியன்மாருக்கான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் தோமஸ் அன்ருஸ் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றும் போது, மியன்மார் நாடானது ஒரு கொலைக்கார, சட்டபூர்வமற்ற ஆட்சியால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தடைகளைப் பிறப்பிக்குமாறும் கேட்டுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை தனது தலைமைத்துவ அறிக்கையில், மியன்மாரின் வீழ்ச்சியுறும் நிலைவரம் தொடர்பாக ஆழ்ந்த கரிசணைகளை வெளிப்படுத்தியிருப்பதோடு, அமைதியான போராட்டக்காரர்கள் மீதான வன்முறைகளைக் கடுமையாகக் கண்டித்திருப்பதுடன் ஜனநாயகத்துக்கு திரும்புமாறு கோரியுள்ளது.

அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நால்வர் அணி நாடுகள், தாம் மியன்மாரில் ஜனநாயகத்தை மீள ஸ்தாபிக்க கூட்டாக செயற்படுவதாக பிரகடனப்படுத்தியுள்ளதாக வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மியன்மார் இராணுவ சதிக்குப் பொறுப்பான பத்துப் பேருக்கு எதிராக அமெரிக்கா தடைகளைப் பிறப்பித்துள்ளது. இதில் இராணுவத்துக்கு நெருக்கமான மூன்று கம்பனிகளும் அடங்கும். ஐக்கிய இராச்சியம் மூன்று ஜெனரல்களுக்கு எதிராக தடைகளைப் பிறப்பித்துள்ளது.

மியன்மாரில் பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதைதான் கவனத்திறிகெடுத்துள்ளதாகவும், அந்த நாட்டுக்கான இராணுவ – தொழில்நுட்ப உதவிகளை நிறுத்துவதற்கு யோசிப்பதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

மியன்மார் இராணுவ சதியைக் கண்டித்து தென்கொரிய நாடாளுமன்றம் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருப்பதோடு ஜனநாயகத்துக்குத் திரும்புமாறும் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை உடனடியாக விடுவிக்குமாறும் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையும் உலகின் ஜனநாயக நாடுகளும் மியன்மார் இராணுவ ஜுன்டா தலைமையின் அட்டூழியங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதுடன் சிவில் ஆட்சிக்கு திரும்புமாறு கோரிவருகின்றன. இலங்கையின் சிவில் அமைப்பினரும் பொதுமக்களுமான நாம் ஐ.நாவுடனும் உலகின் ஜனநாயக நாடுகளுடனும் கூட்டிணைந்து மியன்மாரில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாக்குமாறும், மியன்மாரின் கொலைக்கார, சட்டபூர்வமற்ற இராணுவ ஆட்சியுடன் உறவாட வேண்டாம் என்றும் இலங்கை அரசுக்கு வலியுறுத்துகிறோம்.

மியன்மாரில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐ.நா. பொதுச்சபையிலும், மனித உரிமைகள் பேரவையிலும் பரிந்துரை செய்யுமாறு நாம் இலங்கை அரசைக் கோருகிறோம்

சார்க் நாடுகளையும் மக்களையும் மியன்மார் மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுக்குமாறும் இராணுவ ஜுன்டா ஆட்சியுடன் உறவாட வேண்டாம் என்றும் நாம் வலிந்துரைக்கிறோம்.

மியன்மார் இராணுவ ஆட்சியாளர்கள் ஆட்சியதிகாரத்திலிருந்து இறங்கி ஜனநாயகமாக தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் அதிகாரத்தை ஒப்படைக்கவும், என மற்றும் மதச் சிறுபான்மையினரின் அரசியல் மற்றும் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தவும், மியன்மாரில் மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுக்கவும் வேண்டுமென நாம் ஐ.நாவையும் சர்வதேச சமூகத்தையும் கோருகிறோம்.

எனக்கோரி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியதுடன் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு இணைப்பாளரிடம், மட்டக்களப்பு அரசாங்க அதிபரிடம் ஐ.நா. சபைக்கான மகஜர்களை கையளித்தனர்.

## வணிக வகுப்பு இருக்கைக்காக சிங்கப்பூரில் காத்திருந்த மைத்திரி!

### பொன்சேகா சாடல்

ஈஸ்டர் தாக்குதல்களைத் தொடர்ந்து சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்புவதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வணிக வகுப்பு இருக்கைக்காக காத்திருந்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

சிங்கப்பூரிலிருந்து மதியம் 3 மணிக்கும் இரவு 9 மணிக்கும் இரண்டு விமானங்கள் இலங்கைக்கு வந்திருந்த போதும் முன்னாள் ஜனாதிபதி அந்த இரண்டிலும் நாடு திரும்பாமல் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானத்தில் காலை 12 மணிக்கு புறப்பட்டார் எனக் கூறினார்.

ஜனாதிபதியாக அவர் தனது கடமைகளைத் தவறவிட்ட நிலையில் அவரை குற்றவாளியாக்குவதற்கு பதிலாக சூத்திரதாரிகளை அரசாங்கம் பிடிக்க வேண்டும் என மைத்திரிபால சிறிசேன குறிப்பிட முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் கருத்து தெரிவித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நாட்டில் தற்போதும் தீவிரவாதிகள் உள்ளனர் என்றும் குறிப்பிட்டார்

## முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம்!



2021ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்டத்தின் முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

மாவட்ட அரச அதிபர் க.விமலநாதனின் ஏற்பாட்டில் மாவட்ட ஒருங்கினைப்புக் குழு இணைத்தலைவர்களான வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் ஆகியோரின் இணைத்தலை மையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்களான குலசிங்கம் திலீபன், சார்ள்ஸ் நிர்மலநாதன், விநோனோகராதலிங்கம் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இதன்போது பல்துறை சார் அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம், மற்றும் பூர்த்தி செய்யப்படாத திட்டங்களை தடையின்றி தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள், அனுமதி பெறவேண்டிய கருத்திட்டங்கள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும் சுரகிமு கங்கா தேசிய நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உடல் நலன் காக்கும் நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வடமாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் தவி சாளர்கள், உறுப்பினர்கள், செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள், உதவிப்பணிப்பாளர்கள், முப்படைகளின் உயரதிகாரிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் எனப் பல தரப்பட்டோர் கலந்து கொண்டனர்.

## புத்தாண்டுக் காலத்தில் பயணக் கட்டுப்பாடுகள்!

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் பொது மக்கள் தமது பயணங்களை மட்டுப்படுத்துமாறு அரசாங்கம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

மேலும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு எந்தவொரு கட்டுப்பாடுகளையும் விதிக்க அரசாங்கம் முடிவு செய்யவில்லை என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன குறிப்பிட்டார்.

இருப்பினும் கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் தொடர்ந்து சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மக்கள் தொகையில் ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதை கருத்திற் கொண்டு பயணக் கட்டுப்பாடுகள் தொடர்பாகச் சிந்திக்குமாறும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.03.2021 இல் வெளியிடப்பெற்றது.